# கவனத்தில் கொள்ளவும்

**பெற்றோரே, பாதுகாவலரே, அவதானமாக இருக்கவும். உங்களது பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும். உங்களது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக உங்களது பொறுப்புக்களைச் செய்யுங்கள்.**

- உங்களது பிள்ளைகளுடன் உங்கள் நேரத்தை எப்பொழுதும் செலவழியுங்கள்.
- உங்களது பிள்ளைகள் ஏதாவது ஆபத்தில் இருப்பார்களாயின் அல்லது துன்பத்திற்கு உள்ளாகி இருப்பார்களாயின் அதுபற்றி உங்கள் கவனத்தை செலுத்துங்கள்.
- உங்களது பிள்ளைகள் எங்கே யாருடன் இருக்கிறார்கள் என்பதுபற்றி எப்பொழுதும் அவதானத்துடன் இருங்கள்.
- பாதுகாவலரோ அல்லது உதவியாளரோ இல்லாத உங்களைச் சுற்றி வாழும் சிறார்களின் பாதுகாப்பு சம்பந்தமாக அவதானத்துடன் இருந்து ஏதாவது பிரச்சினைகள் எழுந்தால் அவை சம்பந்தமாக சரியான இடங்களுக்கு அறியத்தாருங்கள்.
- சிறுவர்கள் ஆபத்தான சந்தர்ப்பங்களில் ஈடுபடுவார்களாயின் அதுசம்பந்தமாக விசேட கவனத்தை செலுத்ததுங்கள். உதாரணமாக: தண்ணீர் நிறைந்து இருக்கும் இடங்களில் விளையாடும்போது, கிணறு உட்பட கிடங்குகள், மின்சார இணைப்புக்கள் உள்ள இடங்களில் சிறுவர் உலாவித்திரியும் போது.

**சிறார்களே உங்களது பாதுகாப்பு சம்பந்தமாக விழிப்பாக இருங்கள்**

- சிறுவர்களே! சிறுமியரே! உமக்கு அறிந்த தெரிந்த நண்பர்களுடன் உங்களது பெற்றாருடன் உங்கள் காலத்தை செலவழியுங்கள்.
- ஏதாவது ஆபத்து நிறைந்த சந்தர்ப்பங்களில் உரத்த சத்தமிட்டு உதவியைக் கேளுங்கள்
- நீங்கள் எங்கேயாவது செல்வதாயின் அங்கு யாருடன் செல்கிறீர்கள் எந்த இடத்திற்கு செல்கிறீர்கள் என்பது பற்றி பெற்றோருக்கும் பாதுகாவலருக்கும் தெரிவியுங்கள்.
- உங்களுக்கு விரும்பாத வகையில் இடைஞ்சல் உண்டாக்கும் வகையில் யாராவது ஏதாவது செய்வார்களாயின் உடனடியாக வேண்டாம் என்று சொல்லுங்கள். இதுபற்றி நம்பிக்கையான வளர்ந்தவர்களிடம் தெரிவியுங்கள்.
- ஆபத்து ஏற்படும் இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கவும். உதாரணமாக : தண்ணீர் இருக்கும் இடங்களில் விளையாடுதல். கிணறு உட்பட கிடங்குகள், மின்சார இணைப்புக்கள் இருக்கும் இடங்களுக்கு அருகாமையில் செல்வதைத்த தவிர்க்கவும்.
- உமது நண்பர்களின் , உம்மைச் சுற்றி இருக்கும் ஏனைய சிறார்களின் பாதுகாப்பு சம்பந்தமாக அவதானமாக இருக்கவும். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பாடுமாயின் நம்பிக்கையான வளர்ந்தவர்களிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் இருக்கும் இடத்தில்இருந்து வேறு இடத்திற்கு செல்வதாயின் நம்பிக்கையான வளர்ந்தவருடன் சேர்ந்து பிரயாணம் செய்யவும். அப்படியில்லாவிடின் அவ்வாறு தனியாக செல்வதை தவிர்த்துக் கொள்ளவும்.
- நீர் இருக்கின்ற சூழலில், யாரும் இல்லாத அநாதரவான இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கவும்.

**பெற்றோரே / வளாந்தவர்களே / சிறார்களே!!**

**நீங்கள் இருக்கும் இடங்களில் சிறார்களின் பாதுகாப்பு சம்பந்தமாக சந்தேகத்திற்கு இடமான அல்லது பிரச்சினைக்குரிய நபர்கள் செயற்படுவதை உலாவுவதைக் கண்டால் உடனடியாக கீழ்க்கண்ட இடங்களுக்கு அறிவித்தல் கொடுக்கவும்.**

- நீங்கள் இருக்கும் இடத்தின் பிரதான உத்தியோகத்தருக்கு
- அருகில் இருக்கும் பொலிஸ் அலுவலகத்திற்கு அல்லது
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 சிறுவர் உடனடி உதவித் தொலைபேசிக்கு

WAR child HOLLAND

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

1929